


கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கில், அண்ணல் சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியதை தொடர்ந்து, விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரியில் அமைச்சர் க.பொன்முடி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்று, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, கூடுதல் ஆட்சியர் ஜெ.பத்மஜா மற்றும் பலர் உள்ளனர்.




இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் 1121 பயனாளிகளுக்கு ரூ.13.64 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கி உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஒன்றியக் குழு தலைவர்கள் புவனேஸ்வரி சத்தியநாதன், பி.வடிவேலு, நிர்மலா சௌந்தர், அனிதா குப்புசாமி, நகரமன்ற தலைவர்கள் ஹரிணி தில்லை, லஷ்மிபாரி, தமிழ்ச்செல்வி, மாவட்ட கழக அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுந்தரம், அசோகன், கலைமணி, ஒன்றிய செயலாளர்கள் சண்முகம், சௌந்தர், பேரூர் கழக செயலாளர் பெரியசாமி மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஜெய்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வி.ஜி.கே. சுந்தர விஜி தலைமை! வேலூர் சலவன்பேட்டை பகுதி தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## கந்திலி கரிகாலன் - ஏ. பி. நந்தகுமார் எம்.எல்.ஏ.- தி.அ. முகமது சகி,- ப. கார்த்திகேயன் - டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. - மேயர் சுஜாதா ஆனந்தகுமார் சிறப்புரை!

வேலூர், ஏப்.16-

வேலூர் மாவட்டம் வேலூர் மாநகர தி.மு.க. விற்கு உட்பட்ட சலவன் பேட்டை பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பகுதி கழகத்தின் செயலாளர் வி .ஜி. கே. சுந்தர விஜி தலைமையில் 18.04. 2025 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் சலவன்பேட்டை வள்ளியம்மாள் தெருவில் தமிழக முதல்வர் கழக தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் 772 மகளிர்க்கு சேலை வழங்கும் நலத்திட்ட உதவி நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் 46வது வட்டக் கழக செயலாளர் டி.பாஸ்கர் வரவேற்புரை ஆற்ற உள்ளார். இக்கூட்டத்திற்கு தலைமை பொது குழு உறுப்பினர் சி. சந்திரசேகர், பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் ஏ.பாலாஜி ,ஆர். லோகநாதன், பகுதிகழகத்தின் அவைத் தலைவர் பொன் சுந்தர், மாமன்ற உறுப்பினர் எ. மாலதி ,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர் அசோக், மாவட்ட கலை இலக்கிய அணி தலைவர் வி. கே. கருணாநிதி, மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் சி எஸ். அருணகிரி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் வி சரோஜா வெங்கடேசன், மாநகர மீனவர் அணி அமைப்பாளர் ஏ. உமா சந்திரன், பகுதிகழகத்தின் துணைச் செயலாளர் ஏ. ஜெயச்சந்திரன்,

ஜே. இர்ஷாத், பகுதிகழகத்தின் பொருளாளர் சிவ ஞானம் ,மாநகரக் கழகப் பிரதிநிதிகள் எச். உஸ்மான் கான், ஏ. ஷகீல் அகமத், எஸ் விஜயகுமார், ஏ. முகமது ரஃபி ,வட்டக் கழகத்தின் நிர்வாகிகள் விஜி. ராமமூர்த்தி, எஸ். சதீஷ்குமார், எம். மாணிக்கம், கே. பிரபா, எஸ். வினோத் பிரபாகரன், வி.ஏ. கோபால், தே. ஜெய சங்கர் ,கே .ஆர். ஏ .மனோஜ் குமார், சே. பாஸ்கர் முன்னிலை வகிக்க உள்ளனர். கூட்டத்தில் சிறப்புரையாக தலைமை கழகத்தின் பேச்சாளர் கந்திலி கரிகாலன், கழிஞ்சூர் கண்ணன், மாவட்ட கழகச் செயலாளரும் அணைக்கட்டு சட்டப் பேரவை உறுப்பினருமான

ஏ.பி .நந்தகுமார், வேலூர் மாநகரக் கழகத்தின் செயலாளரும் வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான ப. கார்த்திகேயன், கழகத் தணிக்கை குழு உறுப்பினர் மாவட்ட அவை தலைவர் தி. அ முகமது சகி, கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்

டி. எம். கதிர் ஆனந்த், வேலூர் மாநகராட்சி மேயர் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகரக் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் சூரி என்ற கோவிந்தன், மாநகரக் கழக துணை செயலாளர்கள் ஏ. ஆர் .முன்னா ஷெரிப், ஒய். தேவ நேசன், தங்கமணி ஆனந்தன், மாநகர பொருளாளர் நா. அசோகன், மாநகராட்சி துணை மேயர் தெற்கு பகுதி செயலாளர் எம். சுனில் குமார், 3 வது மண்டல குழு தலைவர் 36வது வட்டக் கழக செயலாளர் கே. யூசுப் கான், 2வது மண்டல குழு தலைவர் மாவட்ட கழக பிரதிநிதி வீனஸ் ஆர். நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் நகரச் செயலாளர் அ.மா. ராமலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். பி. ஏழுமலை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப. நீலகண்டன், சி. ஞானசேகரன், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் டாக்டர் வி .எஸ் .விஜய், மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் எம் நூருல்லா, மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வேலூர் ஜி ரமேஷ், மாநில மருத்துவர் அணி துணை அணி துணைச் செயலாளர் டாக்டர் ராஜேஸ்வரி, பகுதி கழகத்தின் செயலாளர்கள் ஆர்,பி ,சசிகுமார், எம் ஏ .கணேஷ்சங்கர், எஸ் தயாள் ராஜ் ,ஆர் சத்தியமூர்த்தி, ஜி. பாலமுரளி கிருஷ்ணா,சி.எம் தங்கதுரை,ஆர் கே ஐயப்பன், தி.அ. முனவர்பாஷா பி. முருகப்பெருமாள், ஜி வன்னிய ராஜா, என் பரமசிவம் ,தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கதிரேசன், மா,ப. அன்பு நிதி, மாமன்ற உறுப்பினர் ஆர் கங்கா ,மாநகர இளைஞரணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி எம் டி .ஏ . பாலாஜி, மாவட்ட மாணவர் அமைப்பாளர் பி.எம் தேவராஜ், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டி. லோகநாதன் ,

மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் எம்.அந்தோணி, என்.எஸ் ரவி, ஆர் அருண் , கே சீனிவாச காந்தி, அப்துல் மஜீத் என்கின்ற காலப்பா, டி. சக்கரவர்த்தி, ஜெ. ரமேஷ், மகேஸ்வரி கருணாகரன், ப. சேட்டு ,மாவட்ட பிரதி வி. எஸ் .எம் .ஸ்ரீதர், டேனியல் பாபு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் முரளி பாஸ்கர், சையத் இப்ராகிம், தினேஷ்குமார், பன்னீர்செல்வம் சதீஷ்குமார் ,சுரேஷ், ஆர். மதியழகன், எம் ஏ. அண்ணாமலை, காசு சண்முகம், ஐடி விங். இர்ஃபான் பாஷா ,வட்ட கழக செயலாளர்கள் வி எஸ். முருகன், வி. பி. முரளி கிருஷ்ணன், நீதி என்கின்ற ஆர். அருணாச்சலம், வி. ஜெய்சங்கர், கே. ஆனந்தகுமார், எஸ் ராஜா, அப்பு என்கின்ற எஸ். தனசேகர் ,எம் பாபு, குட்டி என்கின்ற ஆறுமுகம், வழக்கறிஞர் என்.ராஜா ,மாநகரப் பிரதி நிதி ஏ. கிருஷ்ணமூர்த்தி பேச்சாளர் கோ. சரவணன், மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி. விஜய், ஆர்.கருணாநிதி, என். சுகுமார் அப்பு என்கின்ற டி. முத்துக்குமரன், ஏ. சந்தானம், எஸ் . மணிகண்டன், ஏ கே. கோபிநாத், வி.டி. கோபிநாத் துபாய் எம். சீனு மன்ற உறுப்பினர்கள் டி. திருப்பாவை. ஜே. விஜயகுமார், பட்டேல் நவ்ஷாத் , கலி முல்லா,விடி. ஜெயசீலன் ,புகாரி, இஷாத் அகமத், என். உமாபதி ,பைரோஸ் கான், முத்து கணேஷ் பிரகாஷ், முத்து, வீரக்குமார், நித்தியானந்தம், மணிகண்டன் ,ரவி, முரளி, உஸ்மான், ஷரீப் அக்தர், குமார், மோகன், முகமது அலி, அமுத ராஜ், செல்வத்தரசி ,லதா, ஜீனத் பகுதி கழகத்திற்கு உட்பட்ட

வட்டக் கழக நிர்வாகிகள் சந்திரசேகர், பத்மநாதன், லட்சுமணன்,ரவி, ரங்கநாதன், மகபூப் பாஷா, அன்பு, பைரோஸ் பாபு, சலீம், திப்பு சுல்தான், செண்பக தேவி, சித்திக் ,நூர்முகமது, நிஷார் பாஷா, முகமது உமாயின், ஷாஜகான், நடராஜன், சையத் சாதுல்லா, குப்பையா, விஜயகுமார்,

விஜயா, தமிழ் முருகன், சங்கர், ராஜேஷ் ,பகுதி இளைஞரணி அமைப்பாளர் இம்தியாஸ்கான், துணை அமைப்பாளர்கள் சுகேல், ராஜசேகர், சரவணன் என்ற குட்டியப்பன், தினேஷ் குமார், யுவராஜ் ,முஜாஹித், சந்தோஷ் குமார் ,ஐ டி விங் ஆதிபாஷா, ஸ்ரீதர், வசந்த் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

முடிவில் பகுதிகழகத்தின் துணை செயலாளர் வெற்றிச் செல்வி, மாநகரப் பிரதிநிதி கே ஆர் கணேஷ் நன்றியுரை ஆற்ற உள்ளனர்.

### சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் – சேலம் மாவட்டத்தில்

# 31 பணிகளுக்கு ரூ.2.20 கோடி நிதி ஒதுக்கி பணிகள் தொடக்கம்!

## தூர்வாரும் பணிகளை தொடங்கி வைத்து அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சேலம், ஏப்.16-

சுற்றுலாத்துறை அமைச்சர் .இரா.இராஜேந்திரன் நீர்வளத் துறையின் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் தூர்வாரும் பணிகளை சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், முல்லைவாடி கிராமம், அய்யனார் ஓடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, முன்னிலையில் நேற்று முன்தினம் (14.04.2025) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2025-26 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்திற்குட்பட்ட, நீர்வளத்துறையின் ஆறுகள் மற்றும் வழங்கு வாய்க்கால்கள் தூர்வாரும் பணிக்காக சேலம் மாவட்டத்தின் 31 பணிகளுக்கு ரூ.2.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியின் கீழ் ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் மொத்தம் 10,165 கி.மீ. நீளத்திற்கு தூர்வார திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிகளில் ஒன்றான சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம், முல்லைவாடி கிராமத்தில் உள்ள அய்யனார் கோயில் ஏரி வரத்து வாய்க்கால் மற்றும் வழிந்தோடி வாய்க்கால் தூர்வாரும் பணி ரூ.8.50 இலட்சத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வாய்க்காலானது 300 கி.மீ. நீளத்திற்கு தூர்வாரப்படவுள்ளது. இதன் மூலம் 103.65 ஹெக்டேர் விவசாய நிலம் பாசன வசதி பெறும்.

மேலும், அய்யனார் கோயில் ஏரி வரத்து வாய்க்கால் மற்றும் வழிந்தோடி வாய்க்காலில் வண்டல்மண் படிந்து ஆங்காங்கே கரைகள் அரிக்கப்பட்டு முட்செடிகள் மற்றும் புதர்கள் மண்டி நீரோட்டத்திற்கு இடையூறாகவும், ஆங்காங்கே வாய்காலில் சேதமடைந்துள்ளதால் முழுமையான நீரோட்டம் தங்கு தடையின்றி செல்ல முடியவில்லை. எனவே அய்யனார் கோயில் ஏரி வரத்து வாய்க்கால் மற்றும் வழிந்தோடி வாய்க்கால் தூர்வாருவது அத்தியாவசியமாகிறது.

மேற்படி வரத்து வாய்க்கால் மற்றும் வழிந்தோடி வாய்க்கால் தூர்வாருவதன் மூலம் ஏரிகளுக்கு நீரோட்டத்தினை முழுமையாக கொண்டு செல்லவும், கரை உடைப்பு, வெள்ளநீர் வடிதல் நீர் விரயத்தை தடுக்கவும், நிலத்தடி நீர் மட்டம் உயர்த்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் பாரப்பட்டி சுரேஷ், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அப்புசாமி, உதவி செயற்பொறியாளர் திருமதி தேன்மொழி, அய்யனார் கோவில் ஏரி நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் ஜி.கிருஷ்ணன் உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! வி.பி.கலைராஜன் முன்னிலை! ச.சண்முகநாதன் வரவேற்புரை!

# நந்தனம் ச.நம்பிராஜனின் 'தளபதி 72 கவிதை மலர்' நூல்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் - கோவி.செழியன் வெளியிட்டு சிறப்புரை!

சென்னை, ஏப்.16-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராசனின் 'தளபதி 72 கவிதை மலர்' நூல் வெளியீடு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 21.4.2025 - திங்கள் கிழமை மாலை 6.30 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். மாநில கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி. கலைராஜன் முன்னிலை வகிக்கிறார். சென்னை தென் மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கவிதை மலர் நூலை வெளியிட்டு அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், ஈரோடு இறைவன், மு.தென்னவன், நா.செந்தில், தஞ்சை கூத்தரசன், எஸ்.வெங்கடாசலம், நா.சந்திரபாபு, க.சேவுகப் பெருமாள், ஆடுதுறை உத்திராபதி, பெருநாழிபோஸ், நேரு பாண்டியன், கே.எஸ். எம்.நாதன், ஆர்.தசரதன், பிரம்மபுரம் பழனி, அ.திராவிடமணி, ஆர்.ஸ்ரீதர், நாகநாதன், சௌமியன், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., நந்தனம் கி.மதி எம்.சி, எஸ். முரளி, விஜய் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். ஏ.செந்தில், ஏ.சதீஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முன்னதாக 21.4.2025 - திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் மயிலாப்பூர் சாந்தோம் காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் அனைவருக்கும் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதிய உணவு வழங்கப்படுகிறது.

### நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணி

# சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கான விண்ணப்பங்கள்

## மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிக்கை!



உதகை, ஏப்.16-

நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம். ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்டத்தில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட தி.மு.க. இளைஞர் அணிக்கான அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றிட தற்போது சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கு மாவட்டத்திற்கு ஒருவர் நியமித்திட கழக இளைஞர் அணி செயலாளர் - தமிழக துணை முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதன்படி, முகநூல், டிவிட்டர், இன்ஸ்டாகிரேம் போன்ற சமூக வலைதள பக்கங்களில் தொடர்ந்து சிறப்புடன் செயல்பட்டு வரும் இளைஞர்கள் இப்பொறுப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பொறுப்புக்காக விண்ணப்பிக்க விருப்பமுள்ள 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் விண்ணப்பத்தினை மாவட்ட கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் பெற்றுக்கொண்டு 16.4.2025 முதல் 24.5.2025 வியாழக்கிழமை மாலை 5 மணிக்குள் பூர்த்தி செய்து வழங்கிட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வேலூர் அண்ணாசாலையில் பொதுமக்கள் தாகம் தீர்க்கும் வகையில் 2வதுமண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன் ஏற்பாடு செய்திருந்த நீர் மோர் பந்தலை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ திறந்து வைத்தார்.உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், பகுதி செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, பாலமுரளி கிருஷ்ணா, தயாள்ராஜ், மாமன்ற உறுப்பினர் வி. எஸ்.முருகன், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் அப்துல்மஜீத் என்ற காலப்பா,மீனவர் அணி அமைப்பாளர் உமா சந்திரன் , மாணவர் அணி நகர துணை அமைப்பாளர் அருண் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மருத்துவ அணி

# நாகை மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட டாக்டர் சி.முகுந்தன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, ஏற்கனவே மாவட்ட மருத்துவ அணித் தலைவராக பணியாற்றி வரும் டாக்டர் எஸ். பால்ராஜ், எம்.பி.பி.எஸ்., டி.டியாப், எஃப் டயாப் (இராமநாயக்கன் குளத் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம்) அவர்கள் நாகை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை18.
நாள்: 15.04.2025.

**டாக்டர் எழிலன் நாகநாதன்,**
செயலாளர்,
தி.மு.க. மருத்துவ அணி.

### மண்டல வாரியாக தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

முதலமைச்சர்- கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரியில் நடந்த மாணவர் அணியை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, "மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்";

17.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் முன்னிலையில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா சாலை, "அன்பகத்தில்" சென்னை கிழக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு, சென்னை தெற்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டமும்;

18.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில், தஞ்சை மத்திய மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், திருவாரூர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில், அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத்தொகுப்புகளை அவசியம் கொண்டுவர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை18.
நாள்: 15.04.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.